ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சியின் 28.02.2024ம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண். 222 ன் உண்மை நகல்

முன்னிலை : திருமதி. வெ. தமிழரசி

தலைவர்,

ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி

பொருள் எண். 6

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஆலங்காயம் கிராம சர்வே எண். 319/1, 319/2 மற்றும் 320/2B ல் (13500 சதுர மீட்டர்) 3.33 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மணைப்பிரிவுகளுக்கான உத்தேச சாலைகள், பூங்கா, பொது ஒதுக்கீடு அமைப்பு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மணைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட விவரம் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். CRJo91KS/2023-2023/TCP, Date : 17.11.2023 கடிதத்தின்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சாலைகள், மூலை முடுக்குகள் பகுதி ஆகியவற்றின் நிலங்களை தானமாக வழங்கும் பொருட்டு மணைப்பிரிவில் ஆலங்காயம் பேரூராட்சிக்கு பொது உபயோகம் 62.20 ச.மீ. பூங்கா 1 - 1139.00 ச.மீ மற்றும் புல்வெளி 2 - 36.10 ச.மீ ஆக மொத்தம் 1237.30 ச.மீ. ஒப்படைக்கப்பட்டுள்ளது. மணைப்பிரிவு நிபந்தனைகளின்படி குடியிருப்பு மணைப்பிரிவில் சாலை மேம்பாடு, வடிகால் வசதி மற்றும் பைப்லைன் ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார். வாணியம்பாடி சார்பதிவகம் தானபத்திர ஆவண எண். 8748/2023, நாள். 10.11.2023ம் தேதியில் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு வசதி மேற்கொள்ள மனுதாரரால் உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் தெரிவிக்கப்பட்ட மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது (இரசீது இணைக்கப்பட்டுள்ளது). திருப்பத்தூர் டவுன், மேற்பார்வை பொறியாளர் / திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் / திருப்பத்தூர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (SUPERINTENDING ENGINEER/TEDC/TANGEDCO/TIRUPATTUR) அவர்களுக்கு வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி சர்வே எண். 319/1, 319/2 மற்றும் 320/2B ல் (13500 சதுர மீட்டர்) 3.33 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளபடி 71 குடியிருப்பு மனைகள் அமைந்துள்ள மணைப்பிரிவாக அங்கீகரித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கு உரிய கட்டணங்கள் வசூலித்து இறுதி ஒப்புதல் வழங்க பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

செயல் அலுவலர் குறிப்பு

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். ந.க.எண். CRJo91KS/2023/2023/TCP, Date : 17.11.2023 ன் படி குடியிருப்பு மணைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய உரிய கட்டணங்களை வசூலித்திடவும், நிபந்தனைகளுக்குட்பட்டு 71 குடியிருப்பு மனைகள் மணைப்பிரிவாக அங்கீகரிக்கலாம்.

தீர்மான எண். 222

அங்கீகரிக்கப்பட்டது.

(ஒப்பம்) வெ. தமிழரசி

தலைவர்

ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி

திருப்பத்தூர் மாவட்டம்.

/ உண்மை நகல் /

செயல் அலுவலர்

ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி

திருப்பத்தூர் மாவட்டம்.